D.V. 1/2017 P.W.1 Malini

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எனக்கும் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணம் மற்றும் வரவேற்பு நிகழ்ச்சிக்காக செலவுகளை எதிர்மனுதாரர் வீட்டில் தான் செய்தார்கள் என்றால் வரவேற்புக்கான செலவில் பாதி தொகையான ரூ.40,000/- எனது தகப்பனார் கொடுத்துள்ளார். வரவேற்புக்கான செலவில் மட்டும் ரூ.40,000/- த்தை எனது தகப்பனார் கொடுத்தார். திருமணத்திற்கு பிறகு நானும் எனது கணவரும் ஒரு மாதம் குடியிருந்தோம். அதன் பிறகு எதிர்மனுதாரர் அக்டோபர் 2013ல் துபாய் சென்றுவிட்டார் என்றால் சரிதான். நான் 2014, மே மாதத்தில் துபாய்க்கு சென்றேன் என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் 8 மாதமும் எனது மாமனார், மாமியார் வீட்டில் தான் இருந்தேன் என்றால் சரிதான். அப்போது எந்தப் பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். துபாய் சென்றபோது தனியாகத் தான் சென்றேன். துபாய்க்கு சென்று ஒரு வாரம் எனது கணவரின் சகோதரி வீட்டில் இருந்துவிட்டு பிறகு தனிக்குடித்தனமாக இருந்தோம். ஜுலை 2014 வாக்கில் எனது மாமனார், மாமியார் துபாய்க்கு வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் எனது கணவரின் சகோதரி சுதா வீட்டில் தங்கியிருந்தார்கள். எங்களது வீடு சிறியதாக இருந்ததால் நாங்கள் எல்லோரும் ஒன்றாக சுதா வீட்டில் இருந்தோம். எனது மாமனார், மாமியார் துபாயில் ஒரு மாதம் இருந்தார்கள். அது வரை எல்லோரும் ஒன்றாகத் தான் இருந்தோம். அதன் பிறகு அவர்கள் ஊருக்கு வந்துவிட்டார்கள். எனது மாமனார், மாமியார் வந்தபிறகு பிரச்சனைகள் வர ஆரம்பித்தது. எனக்கு தூத்துக்குடியை சேர்ந்த ரோஸி என்ற தோழி இருக்கிறார் என்றால் சரிதான். அவரும் நானும் சென்னையில் ஒரே அறையில் தங்கியிருந்தோம். அவர் துபாயில் என்னிடம் அடிக்கடி பேசுவார் என்றால் சரியல்ல. எப்போதாவது பேசுவார். எனது தோழியிடம் நான் கருவுற்ற விசயத்தை இந்தியா வந்தபோது சொன்னேன். துபாயில் இருந்தபோது சொல்லவில்லை. எனது தோழி எனக்கு இந்த வயதில் குழந்தை தேவையில்லை என்றும், அதை கலைத்துவிடுமாறும் சொன்னாரா என்றால் சொல்லவில்லை. எனது கணவரிடம் எனது தோழியின் அறிவுரைப்படி கருக்கலைப்பு செய்ய வேண்டுமென்று நான் சொன்னேன் என்றால் சரியல்ல. கருவை கலைக்கவில்லை என்றால் நான் தற்கொலை செய்து கொள்வேன் என்று தலையை சுவற்றில் மோதி பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. எனக்கு தைராய்டு என்ற ஒரு நோய் இருந்தது என்றால் ஆரம்பத்தில் இல்லை. கருவுற்றிருந்தபோது எல்லா பரிசோதனையும் செய்தபோது தைராய்டு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. தைராய்டு இருப்பதால் கருக்கலைப்பு செய்யக்கூடாது என்று எனது கணவர் அறிவுறுத்தினார் என்றும், நான் அதை கேட்காமல் அவரிடம் அடிக்கடி பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. கருக்கலைப்பு செய்ய அனுமதிக்காவிட்டால் நான் தற்கொலை செய்துகொண்டு என் கணவரையும், அவரதுபெற்றோரையும் வழக்கில் சிக்க வைத்துவிடுவேன் என்று மிரட்டினேன் என்றால் சரியல்ல. எனது கணவரின் தங்கை சுதா வீட்டிற்கு அவர் செல்லக்கூடாது என்று அடிக்கடி பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. எனது கணவர் சுதா வீட்டிற்கு சென்றால் அவருடன் பேசாமல் பிரச்சனைகளை அதிகமாக்கி கொண்டு வந்தேன் என்றால் சரியல்ல. எனக்கு விசா வாங்கி துபாய்க்கு கூட்டிச் சென்றது எனது கணவர் என்றால் சரிதான். எனது கணவர் எல்லா விசயங்களையும் தனது பெற்றோரிடம் சொல்லி விடுவதாக சொல்லக்கூடாத

தகாத வார்த்தைகளை சொல்லி அவரிடம் சண்டை போட்டேன் என்றால் சரியல்ல. துபாயில் இருந்தபோது எனது கணவருக்கு ஏகப்பட்ட தொல்லை கொடுத்து தற்கொலை செய்துகொள்வேன் என மிரட்டி மனஉளைச்சலை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் ஆகஸ்ட் 2014ல் இந்தியாவிற்கு வந்தேன். அப்போது நான் 3 மாதம் கர்ப்பிணியாக இருந்தேன். துபாயில் இருந்தால் அதிகம் செலவாகும் என்று என்னிடம் கேட்காமலேயே என்னை இந்தியாவிற்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். இந்தியா வந்தபிறகு 15, 16 நாட்கள் எனது மாமியார் வீட்டில் தான் தங்கியிருந்தேன். அதன் பிறகு அவர்களிடமும் சண்டை போட்டுவிட்டு எனது திருமணத்தின் போது போட்ட நகைகளை எடுத்துக் கொண்டு எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் நகைகளை எடுத்து செல்லவில்லை. எனது தகப்பனார் தான் என்னை அழைத்துச் சென்றார். எனது கணவர் திருமணத்திற்கு முன்பு எனது உறவினர் அல்ல. திருமணம் நிச்சயிக்கப்படுவதற்கு முன்பு ஜாதகத்தை தான் பார்ப்பார்கள் என்றால் சரிதான். நாங்கள் கொடுத்த ஜாதகத்தில் எனக்கு தனுசு ராசியும், பூராடம் நட்சத்திரமும் இருந்தது. ஆனால் உண்மையில் எனக்கு தனுசு ராசியும், மூலம் நட்சத்திரமும் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் வீட்டில் எனது ஜாதகமாக கும்ப ராசியும், பூரட்டாதி நட்சத்திரமும் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் கொடுத்த ஜாதகத்தை வைத்து எங்களுக்கு திருமணம் செய்து விட்டார்கள் என்றால் தனுசு ராசி, பூராடம் நட்சத்திரம் உள்ள ஜாதகம் தான் எனது தகப்பனார் கொடுத்தார். எனது கணவரின் தகப்பனார் எதேச்சையாக முசிறியில் உள்ள தேவசேனா திருமண மையத்தில் எனது ஜாதகத்தை பார்த்தபோது எனது உண்மையான ஜாதகம் அவருக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல. பொதுவாக மூலம் நட்சத்திரம் உள்ளவர்கள் மாமனார், மாமியார்இல்லாத வீட்டில் தான் திருமணம் செய்வார்கள் என்றும், எனது ஜாதகத்தை பார்த்துவிட்டு எனது மாமனார், மாமியாருக்கு அதிர்ச்சியும் அச்சமும் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மூல நட்சத்திரத்தில் உள்ள பெண்ணை திருமணம் முடித்தால் மாமனார், மாமியார் இறந்துவிடுவார்கள் என்பது ஐதீகம் என்பதால் அவர்களுக்கு மிகுந்த அச்சம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. திருமணத்தின் அடிப்படையே ஜாதகம் தான் என்றும், ஏமாற்றி ஜாதகத்தை மாற்றி எதிர்மனுதாரரை திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. நான் எனது வீட்டிற்கு சென்ற விசயத்தை எனது கணவருக்கு தெரியப்படுத்தினேனா என்றால் அவருக்கு தெரியும். நான் பேச முயற்சித்தேனா என்றால் எனது செல்போனில் பேலன்ஸ் இல்லாததால் அவரிடம் சொல்ல இயவலில்லை. மெசேஜ் அனுப்பினேன். நான் எவ்வித தகவலும் அவருக்கு சொல்லவில்லை என்றும்,மெசேஜ் அனுப்பியதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அதன் பிறகு எனது கணவருடன் இதுவரை நான் பேசவில்லை என்றால் நான் போன் போட்டால் அவர் கட்பண்ணிவிடுவார். எனக்கு வளைகாப்பு நடந்ததா என்றால் இல்லை.எனக்கு வளைகாப்பு நடந்தது என்றும், எதிர்மனுதாரர் குடும்பத்தை அவமானப்படுத்த வேண்டுமென்று அவ்விசயத்தை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. குழந்தை பிறந்தவுடன் நான் போன் செய்தேன். போனை எடுத்துவிட்டு எனது கணவர்பேசவில்லை. மெசேஜ் அனுப்ப வேண்டாமென்று மெசேஜ் அனுப்பினார். அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 07.06.2015 அன்று வெள்ளூருக்கு எதிர்மனுதாரர் வீட்டிற்கு நாங்கள் 20பேர் சென்றோம் என்றால் 9 பேர் சென்றோம். எதிர்மனுதாரர் வீட்டில் நாங்கள் வருவதாக தகவல் சொல்லாமல் அனுமதி கேட்காமல்கும்பலாக சென்றோம் என்றால் கும்பலாக செல்லவில்லை. என்னை

விடுவதற்காக எனது உறவினர்கள் வந்தார்கள். எதிர்மனுதாரர் வீட்டில் எதிர்மனுதாரர் துபாயிலிருந்து வந்தவுடன்பேசிக் கொள்ளலாம் என்று சொன்னார்கள் என்றால் சரியல்ல. என்னுடன் வந்தவர்கள் எதிர்மனுதாரர் வீட்டு கதவை உதைத்து உடைத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எங்களைப் பார்த்தவுடன் அவர்கள் கதவை மூடிவிட்டார்கள். அதன் பிறகு பஞ்சாயத்து பேசப்பட்டது என்றும், நாங்கள் உடன்படாமல் டைவர்ஸ் வேண்டுமானால் பண்ணிக் கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டோம் என்றால் சரியல்ல. 25.06.2015ம் தேதி சமூக நலத்துறை, திருச்சியில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். எனது கணவர் விசாரணைக்காக ஜுலை 2015ல் இந்தியாவுக்கு வந்தார் என்றால் அவர் எப்போது வந்தார் என்று தெரியாது. நான் அவரிடம் விவாகரத்து செய்து கொள்ளுங்கள் என்று சொன்னதால் எச்.எம்.ஓ.பி.நெ. 255/2015 மனு தாக்கல் செய்தார் என்றால் நான் விவாகரத்து செய்ய சொல்லவில்லை. அவர் வந்த விசயமே விவாகரத்து நோட்டிஸ்பெற்ற பிறகு தான் எனக்கு தெரிய வந்தது. வழக்கிற்காக வந்தவர் மீண்டும் துபாய்க்கு போக முடியாமல் இருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது வழக்கில் ஆஜராகி வருகிறார் என்றால் சரிதான். எனது செய்கையால் எதிர்மனுதாரர் வேலைக்கு செல்ல முடியாமல் மிகுந்த கஷடத்தில் இருக்கிறார் என்றால் சரியல்ல. நான் எம்.சி.ஏ. படித்திருக்கிறேன் என்றால் சரிதான். நான் துறையூரில் சத்யா கம்ப்யூட்டர்சில் ரூ.20000/- சம்பளத்தில் வேலைப் பார்த்தேன் என்றால் சரியல்ல. வேறொரு நிறுவனத்தில் ரூ.7000/ சம்பளத்தில் வேலைப் பார்த்தேன். தற்போது அந்த வேலைக்கும் செல்வதில்லை. தற்போதும் நான் மாதம் ரூ.20000- சம்பளத்தில் வேலைப் பார்க்கிறேன் என்றும், எனது கணவர் மிகவும் நலிவுற்று மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளார் என்றால் சரியல்ல. திருமணத்தின் போது 34 பவுன் நகையும், ஒன்றரை லட்சம் மதிப்புள்ள சீர்வரிசைகளும் கொடுத்ததாக சொல்வதுபொய் என்றால் சரியல்ல. திருமணத்தின் போது எனக்கு எதிர்மனுதாரர் வீட்டில் தாலி செயின் போட்டார்கள் என்றால் சரிதான். அந்த தாலி செயினும் எனது பெற்றோர் எனக்கு கொடுத்த நகைகளும் என்னிடம் தான ் இருக்கிறது என்றால் நர்ன அணிந்த நகைகளுடன் வந்துவிட்டேன். எனது பெற்றோர் கொடூத்த நகைகள நான் எடுத்து வரவில்லை. தோடு, வளையல்,. தாலி கொடி ஆகியவற்றோடு வந்துவிட்டேன். நான் எதிர்மனுதாரருக்கு எதிராக அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என்னை அடிக்காததால் தான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவரோடு வாழவேண்டுமென்ற எண்ணத்தில் புகார் கொடுக்கவில்லை. நான் சொல்லியிருப்பது போல் எனக்கு கஷ்டம் எதுவும்இல்லை என்றும்,எதிர்மனுதாரர் தான் எனது செய்கையால் பாதிக்கப்பட்டு மன உளைச்சலில் இருக்கிறார் என்றும், அதனால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை